Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 30
செவ்வாய்க்கிழமை
26 டிசெம்பர் 2023
மார்கழி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"இப்ப பாய்ஞ்சு பாய்ஞ்சு பிடிக்கிற மாதிரி முதலே செய்திருந்தால் போதையையே இல்லாமல் செய்திருக்கலாமே"

## பொலிஸாரின் விசேட தேடுதலில் கைது செய்யப்பட்டோரில் 70% போதையாளர்களே!

### மருத்துவப் பரிசோதனைகளில் உறுதி

யாழ்ப்பாணம், டிசெம்பர் 26

**பொலிஸாரால் யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 70 சதவீதமானோர் உயிர்கொல்லி போதைப் பொருள்களைப் பயன்படுத்துபவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவப் பரிசோதனைகளில் அவர்கள் உயிர்கொல்லி போதைப்பொருள் பயன்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

11

## பாலத்தில் வீழ்ந்து இளைஞன் சாவு!

மன்னார், டிசெ. 26

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பாலத்தினுள் வீழ்ந்ததில் இளைஞன் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

11

## முள்ளியவளையில் புதையல் தோண்டியவர்கள் கைது

முல்லைத்தீவு, டிசெ. 26

இந்தியாவிலிருந்து வருகைதந்த மூவர் உள்ளிட்ட 5பேர் முல்லைத்தீவு, நாவல் காட்டில் புதையல் தோண்ட முற்பட்டபோது முள்ளியவளைப் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-19)

## ஆழிப்பேரலை அனர்த்தம் இன்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 26

ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டோரின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று தமிழர் தாயகம் உட்பட இலங்கை முழுவதும் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

11

யாழ்ப்பாணத்தில்

## டெங்குக் காய்ச்சலால் 11 மாதக் குழந்தை சாவு!

### 25 வயதான இளைஞன் அவசர சிகிச்சைப் பிரிவில்

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணத்தில் டெங்கு தீவிரமாகப் பரவி வரும் நிலையில் 11 மாதக் குழந்தையொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

தாவடியைச் சேர்ந்த மதுரன் கிருத்திஸ் என்ற பதினொரு மாத குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. குழந்தைக்கு கடந்த திங்கட்கிழமை காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமையே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தை சேர்க்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் குழந்தை உயிரிழந்துள்ளது.

இதேவேளை- 25 வயதான இளைஞர் ஒருவர்

11

## மார்கழி இசைவிழாவும் கண்காட்சியும் விற்பனையும்

### நாளை பிரமாண்டமாக ஆரம்பம்

### மாநகரசபையில் கட்டண விதிப்பால் அதிருப்தி

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகம் என்பன இணைந்து நடத்தும் மாபெரும் மார்கழி இசை விழாவும் வடமாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் மற்றும் வெளிநாட்டுக்கான சந்தைவாய்ப்பும் நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பில் வணிகர் கழகத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில், புதன்கிழமை மு.ப. 10 மணிக்குச் சம்பிரதாயபூர்வமாக கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும். மண்டபத்தின் வெளிப்புறத்திடலில் சுமார் 140 காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்று தினங்களும் மாலை 4.45 மணி முதல் இரவு 9.15 மணி வரை மார்கழி இசைவிழா நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் புகழ்பூத்த இலங்கை, இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளார்கள். இந்த இரு நிகழ்வுகளுக்குமான பிரவேசம் இலவசம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- கண்காட்சியில் ஒவ்வொரு கடைகளுக்கும் நாளொன்றுக்கு தலா ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்தப்படவேண்டும் என யாழ். மாநகர

11



## மஞ்சள் மூடைகள் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 26

காக்கைதீவில் மீன்பிடிப் படகில் வைக்கப்பட்டிருந்த 400 கிலோ மஞ்சள் மூடைகள் நேற்று மீட்கப்பட்டன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டுள்ளன. (அ-ஒ-27)

## குடத்தனை முதியவரின் உயிரிழப்பில் சந்தேகம் பாகங்கள் கொழும்புக்கு

பருத்தித்துறை, டிசெ. 26

வடமராட்சி கிழக்கு குடத்தனையைச் சேர்ந்த முதியவரின் உயிரிழப்பு கொலையாக இருக்கலாம் என சந்தேகம் நிலவுவதன் காரணமாக உடற்கூற்றுப் பாகங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலம்புரிச்சங்குடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.26
மன்னார், சாந்திபுரத்தில் 4 வலம்புரிச்சங்குகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் 60 வயதுடையவர் என்றும், அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-இ)

# தாழ்வுப்பாலத்தை மேம்பாலமாக்குக

## பிரதேச மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, டிசெ. 26**

**கிளிநொச்சி, அக்கராயன் தாழ்வுப்பாலம் மேம்பாலமாக மாற்றப்படாததால் ஆண்டு தோறும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் மழைக்காலத்தில் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.**

அக்கராயன் குளத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர் அக்கராயன், திருமுறிகண்டி வீதியில் உள்ள 25 அடி நீளமான தாழ்வுப் பாலம் ஊடாக வெளியேறும். இந்தப் பாலத்தில் நீர் தேங்குவதால் சமாதானபுரத்தின் வயல் நிலங்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கும்.

மழை காலத்தில் வன்னேரிக்குளம், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், அக்கராயன்கிழக்கு, கோணாவில், யூனியன்குளம், கண்ணகைபுரம், கந்தபுரம், முக்கொம்பன், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம் உட்பட கிளிநொச்சி மேற்கின் பல கிராமமக்கள் இந்தப் பாலத்தின் வழியாகப் பயணிக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களில் இந்தப் பாலத்தை மேம்பாலமாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பாலத்தை மேம்பாலமாக மாற்றுவதற்கு எழுபத்தைந்து மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பீடுகள் செய்யப்பட்டன. ஆயினும் மேம்பாலமாக மாற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்தப் பாலத்தை மேம்பாலமாக மாற்றுவதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி-13)

## இந்தியப் பசுமாடுகள் இலங்கைக்கு வராது!

இந்தியாவிலிருந்து பசுமாடுகள் இறக்குமதி செய்யப்படமாட்டாது என்று விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு இந்தியாவின் முன்னணி பால் உற்பத்தி நிறுவனத்துடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்துள்ளது. அந்த நிறுவனம் இந்தியாவில் நடைமுறைப்படுத்தும் திட்டத்தையே இலங்கையிலும் நடைமுறைப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் அந்த நிறுவனம் பசுமாடு வைத்திருப்பவர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தி வருகிறது. இதே தொழில்நுட்பத்தை மேற்படி நிறுவனம் இலங்கையிலும் அறிமுகம் செய்யவுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக ஒரு மாடு வைத்திருப்பவர் கூட தனது பெயரை பதிவு செய்து கொள்ளமுடியுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-6)

## குறைந்த கட்டணத்தில் இலங்கைக்கு மின்சாரம்!

இலங்கைக்குக் குறைந்த கட்டணத்தில் காற்றாலை மின்சாரத்தை வழங்கவுள்ளதாக அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒரு யுனிற் மின்சாரத்துக்கு 0.1 டொலருக்கும் குறைவான கட்டணமே அறவிடப்படவுள்ளதாகவும் அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, காற்றாலை மின்கட்டணம் அனல்மின் கட்டணத்தை விட அதிகம் என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே ஒரு யுனிற் மின்சாரத்துக்கு 0.10 டொலருக்கும் குறைவான கட்டணமே அறவிடப்படவுள்ளதாக அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-6)



## கொரோனாத் திரிபை எதிர்கொள்ளத் தயார்!

கொழும்பு, டிசெ.26
புதிய கொரோனாத் திரிபு விவகாரத்தைக் கையாள சுகாதார அமைச்சு தயாரான உள்ளது என்று அமைச்சின் செயலாளர் மருத்துவ நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் பதிவாகும் நோயாளர்களின் மாதிரிகள் பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கொழும்பு மற்றும் கண்டி தேசிய மருத்துவமனை உட்பட 19 மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு அவை தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புதிய கொரோனாத் திரிபு இலங்கைக்குள் பிரவேசித்துள்ளபோதிலும், அது தொடர்பான மரபணுப் பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என சுகாதாரத்துறையினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (எ-இ)

## கீரிமலை - காங்கேசன் வீதியை திறந்து விடுமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம், டிசெ.26
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள கீரிமலையில் இருந்து காங்கேசன்துறை செல்லும் வீதியை பொதுப் பாவனைக்கு வழங்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ளதால் கீரிமலையில் இருந்து காங்கேசன்துறை செல்வதற்கு ஐந்து கிலோமீற்றர் தூரம் மேலதிகமாகப் பயணிக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"இந்த வீதி ஊடாகவே முன்னர் 763, 769 மற்றும் 764 வழித்தட பயணிகள் பஸ்கள் பயணித்தன. இந்த வீதி விடுவிக்கப்பட்டால் ஒன்றரை மணி நேரத்தில் கீரிமலையில் இருந்து காங்கேசன்துறைக்குச் செல்லமுடியும். அதியுயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி இந்த வீதியால் பொதுமக்கள் பயணிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் உள்ள வீதிகளால் பயணிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால், இங்கு பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி வீதி மூடப்பட்டுள்ளது. இந்த வீதியைப் பாவனைக்கு விட்டால் வரலாற்றுச் சிறப்பு மிக்க சுற்றுலா இடங்களான சடையம்மா சமாதி, கிருஷ்ணன் கோவில், குகை மற்றும் ஊற்றல் ஆகிய இடங்களுக்குச் செல்லமுடியும். தற்போது காங்கேசன்துறை முகம் திறக்கப்பட்டுள்ளது. ஆகையால் இந்த வீதியையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று மக்கள் தெரிவித்தனர். (எ-27)

## கடனாளிகளது சொத்துகளை சுவீகரிக்காமல் விடமுடியாது!

### வங்கியாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 26
வங்கிகளின் கடன்பெற்றுள்ளவர்கள், தங்களின் சொத்துகளைத் திரும்பச் செலுத்த முடியாத நிலையேற்பட்டால் அவர்களின் சொத்துகளை சுவீகரிக்காமல் விடமுடியாது என்று வங்கியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

உரிய தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்களுக்கு வட்டிக் குறைப்பு, கால நீடிப்பு போன்ற பல சலுகைகளை வழங்குகிறோம். வங்கியில் கடன் பெற்ற ஒருவர் பொருளாதார ரீதியில் தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ளாவிட்டால் அதற்கு நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது. கடன் பெற்றவரின் நன்மைக்காக வாடிக்கையாளரின் பணத்தை தாரைவார்க்க முடியாது. வாடிக்கையாளரின் பணத்தை பாதுகாத்து உரிய முறையில் திருப்பிச் செலுத்த வேண்டியது வங்கிகளின் கடமை - என்றும் வங்கியாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-6)

## சமாதான நீதிவான் கசிப்புடன் கைது

வெல்லம்பிட்டிய, கொஹிலவத்தையில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் சமாதான நீதிவான் ஒருவரும், அவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேல்மாகாண தெற்கு மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்களிடம் இருந்து 22 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு, 7 இலட்சத்து 56 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-இ)

## மன்னிப்புக் கோரிய எயார் லைன்ஸ்!

பயண இடையூறுகளால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களிடம் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மன்னிப்பு கோரியுள்ளது.

அந்த நிறுவனத்தின் இரு எயார் பஸ் விமானங்கள் பல நாள்களாகச் சேவையில் ஈடுபடாததால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர். அதையடுத்தே ஸ்ரீலங்கன் விமான சேவை பயணிகளிடம் மன்னிப்புக் கோரியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 மாதங்களில் குற்றங்கள் 50 சதவீதமாகக் குறையும்

## பதில் பொலிஸ் மா அதிபர் நம்பிக்கை

**கொழும்பு, டிசெ.26**

**குற்றங்களின் எண்ணிக்கையில் சடுதியான சரிவு ஏற்பட்டுள்ளது. தற்போதைய சுற்றிவளைப்புக்களை அதிகரிக்கும் பட்சத்தில் 6 மாதங்களில் குற்றங்களை 50 சதவீதமானாகக் குறைக்க முடியும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.**



போதைப்பொருள்கள் கைப்பற்றப்படுகின்றபோதும், நெத்தலிகளே கைது செய்யப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. சிறிய மீன்களைப் பிடித்தால், பெரிய மீன்களை இனங்கண்டுகொள்ளமுடியும். அந்தநாள் தொலைவில் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி!

## டிரான் அலஸ் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் முற்றுப்புள்ளி வைக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்தச் சவாலான பயணத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடல் மார்க்கமாகக் கொண்டுவரும் போதைப்பொருள் கடத்தல்களைத் தடுக்க கடற்படையினர் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது எந்தத் தயவும் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# போதையில் சாரத்தியம் இனி கடும் நடவடிக்கை

கொழும்பு, டிசெ.26

வீதிவிதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகச் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்தவதற்காக பிரதான மற்றும் குறுக்கு வீதிகளில் 24 மணிநேரம் பணியில் ஈடுபடவேண்டும் என்றுபணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு இறுதியில் அதிக விபத்துகள் நடப்பதை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# போதைப்பொருள் ஒழிப்பு திருப்திகரமாக இல்லை!

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.26

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் கீழ்மட்ட போதைப்பொருள் விற்பனையாளர்களே இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். உயர்மட்டத்தில் உள்ள போதைப்பொருள் விற்பனையாளர்களை இலக்கு வைத்தால் பெரும்தொகைப் போதைப் பொருள்களைக் கைப்பற்ற முடியும் என்று ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காகச் செலவிடப்பட்ட நேரம் மற்றும் வளங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் அளவு மிகச்சிறிதளவானவையே. போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய மிகமுக்கியமான தரப்பினர் பற்றி அறிந்துகொள்வதற்கு ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களை விசாரிக்கவேண்டும் என்று கூற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# 5 அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகை!

கொழும்பு, டிசெ.26

அரசாங்கத்துக்கு வரி இழப்பை ஏற்படுத்தியமைக்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 5 அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கையூட்டல் விசாரணை ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாகவே இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டிப் பதிவு தொடர்பான தரவுகளை நீக்கிவிட்டு சொகுசு மகிழுந்து ஒன்றின் தரவுகளை உள்ளிட்டுப் போலியான ஆவணங்களைப் பதிவு செய்தமை தொடர்பாகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# சடலமாக மீட்கப்பட்ட பாதாள உலகத் தலைவர்

பாதுக்கை, துன்னான பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் இருவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவர் என்று கூறப்படும் டொன் இந்திக என்று அழைக்கப்படும் மன்ன ரொஷான் மற்றும் அவரது நண்பர் ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)




# ப தினம் தெரியுமோ?

**எதைச் செய்ய வேணுமோ அதைச் செய்யாமல் விட்டிட்டு, எதைச் செய்யாக்கூடாதோ அதை மட்டும் வலுதிறமாச் செய்யிறதில எங்கட ஆக்கள் வலுவின்னர். இப்பிடித் தேவையில்லாத ஆணியளைப் பிடுங்கிறதில அரசாங்க உத்தியோகத்தர்மாரிட்ட மற்றவை பிச்சைதான் எடுக்கோனும். இதுக்கு நல்ல உதாரணம் கிட்டடியில வவுனியாவில நடந்திருக்கு.**

**வவுனியாவில இப்ப மழையால கன இடத்தில வெள்ளம். ரவுனுக்ககூட கன இடங்களில வெள்ளம் ஓடமுடியாமல் தேங்கி நிண்டது. அதைவிட டெங்குக் காய்ச்சலும் பரவத் தொடங்கிட்டுது. எல்லா இடமும் வெள்ளம் தேங்கி நிண்டால் டெங்கு வரத்தானே செய்யும்? டெங்கு ஒருபக்கம் எண்டால் கட்டாக்காலி மாடுகள் மற்றொரு பக்கம். அந்தமாடுகள் மேயிற நேரத்தை விடவும் ரவுனுக்க தங்க சிநேகிதரோட கூடி நிண்டு கும்மியடிக்கிறதுதான் கூட. அதால றோட்டால போய்வாற வாகனங்கள் மாடுகளில அடிக்கடி மோதுப்படுகுது. அதைவிட ரவுண் முழுக்க ஒரே குப்பையும் கூளமும். இப்பிடி குப்பை கூளத்தை அகற்றி நகரத்தைச் சுத்தமா வைச்சிருக்கிறதும், டெங்கு வராமல் தடுப்பு நடவடிக்கையளைச் செய்யிறதும், கட்டாக்காலியளைக் கட்டுப்படுத்துறதும் நகரசபையின்ர வேலை. ஆனால் இதுகளைப் பற்றி எத்தினை முறைப்பாடு செய்தாலும் நகரசபைக்காரர் கண்டுகொள்ளாயினம். இப்பிடி அவசரமான அலுவல்களையெல்லாம் ஆடிப்பாடிச் செய்யிற நகரசபை, றோட்டுக்கரையில சோளம், பனங்கிழங்கு வித்தவரின்ர கடையை மட்டும் விழுந்தடிச்சுப் பிடுங்கி வீரம் காட்டியிருக்கு.**

**இப்ப பனங்கிழங்கு சீசன். அதால வவுனியாவில கன இடங்களில றோட்டோரக் கடையள் புதிசா முளைச்சிருக்கு. இந்த சீசன்காலத்திலதான் இப்பிடிச் சின்னச் சின்னக் கடை போட்டு அந்தச் சனம் கொஞ்சமெண்டாலும் உழைக்கமுடியும். அப்பிடி கடை போட்டு பனங்கிழங்கும், சோளமும் வித்ததால றோட்டில போக்குவரத்துப் பாதிப்பு, சுகாதாரச்சீர்கேடு, பெர்மிசன் எடுக்கேலை, காசு கட்டேலை எண்டு ஏதேதோ சொல்லி, கடையைப் பிடுங்கி, அங்க இருந்த கிழங்கு, சோளன் எல்லாத்தையும் ட்ரக்டரில ஏத்த வெளிக்கிட்டிருக்கினம். இத்தனைக்கும் அதேறோட்டில சிங்கள, முஸ்லிம் ஆக்களும் நிறையக் கடையள் பெர்மிசன் இல்லாமல் போட்டிருக்கினம். அங்க தங்கட பருப்பு வேகாது எண்டதால, இந்த அப்பாவித் தமிழ்க் கடைக்காரரிட்ட வந்து எழுப்பம் காட்டியிருக்கினம், அந்த மனுசனும் விடேலை. கோபத்தில தன்ர கடையில இருந்த கிழங்கு, சோளம் எல்லாத்தையும் அப்பிடியே நடுறோட்டில கொட்டிப்போட்டு இருந்திட்டார். அதுக்குப் பிறகுதான் நகரசபைக்காரர், அந்த மனுசனின்ர யாவாரத்துக்கு முற்றுப்புள்ளி வைச்சு, அவரின்ர குடும்பத்தின்ர சாப்பாட்டில மண்ணள்ளிப் போட்ட திருப்தியோட போனவை.**

**சட்டங்கள் எல்லா இடத்துக்கும் பொருந்தாது. சில இடங்களில சட்டங்களை விட மனச்சாட்சிப்படி நடக்கோனும். உதெல்லாம் உந்த நகரசபைக்காரருக்கு எங்க விளங்கப்போகுது?**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**



## துலாம்

### 5 இல் சனி

நியாயத்தின் பக்கம் நின்று நல்லதையும் கெட்டதையும் அலசி ஆராயும் குணம் படைத்த துலாராசி அன்பர்களே...!

இதுவரை ராசிக்கு 4 ஆம் இடத்தில் அட்டமத்துச் சனியாக நின்று அலைக்கழித்த சனிபகவான் 20.12.23 முதல் 5ஆம் இடம் எனப்படும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அடி எடுத்துவைக்கிறார். இந்த மாற்றம் உங்கள் வாழ்வில் பல விதங்களிலும் நற்பலன்களை வாரிவழங்கப்போகிறது. இயல்பாகவே சனி பகவான் உச்சமடையும் ராசி துலா ராசி. எனவே அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்யும்போது நற்பலன்களே அதிகமாக இருக்கும். யோக பலன்களும் ஏற்படும். இதுவரை குடும்பத்தில் இருந்த மருத்துவச் செலவுகள் குறையும். தாயின் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

வேலைபார்க்கும் இடத்தில் தற்போது இருக்கும் பலவித நெருக்கடிகள் குறையும். சக ஊழியர்கள் மரியாதை கொடுப்பார்கள். குடும்பத்தினருடன் சிரித்துப் பேசி மகிழும் சூழல் உண்டாகும். பாதியில் நிற்கும் வீடுகட்டும் பணி முடிவுக்கு வரும். அதற்குத் தேவையான வங்கிக் கடன் உதவி உடனே கிடைக்கும்.

சிலருக்கு அவ்வப்போது எதிர்மறை எண்ணங்கள் உண்டாகி நீங்கும். யோகா, தியானம் ஆகியவற்றின் மூலம் அதைக் கட்டுப்படுத்தி வெற்றி பெறுங்கள்.

**சனிபகவானின் பார்வைப் பலன்கள்**

சனிபகவான் உங்களின் 2, 7, 9 ஆகிய வீடுகளைப் பார்ப்பதால் பேச்சில் எச்சரிக்கை தேவை. பேச்சால் வம்பும் வீண் பகையும் உண்டாகும். தேவையில்லாமல் உணர்ச்சி வசப்பட்டுப் பேசி பிரச்சினையைப் பெரிதாக்கி விடுவீர்கள். சிலருக்குப் பார்வைக் கோளாறு ஏற்படும். எனவே சிறு பிரச்சினை என்றாலும் உடனே மருத்துவரைப் பார்ப்பது நல்லது. அக்கம் பக்கத்தில் விட்டுக் கொடுத்துப்போங்கள். சின்னச் சின்னப் பிரச்சினைகளைப் பெரிதாக்க வேண்டாம். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தில் உரிய கவனம் செலுத்துங்கள். அவரோடு வீண் விவாதம் செய்வதைத் தவிருங்கள். நெடுநாள்களாக வரமாலிருந்த பணமெல்லாம் இனி கைக்கு வரும். ஷேர் மார்க்கெட் முதலீடு இலாபம் தரும்.

**வியாபாரம்:** வியாபாரத்தில் இருந்த தேக்க நிலை மாறும். பற்று வரவு உயரும். அதிக இலாபமடைவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**உத்தியோகம்:** பணிச்சுமை படிப்படியாகக் குறையும். அனுபவம் பளிச்சிடும். அனைத்துவேலைகளையும் மிக எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். சக ஊழியர்கள் நட்பு பாராட்டுவார்கள். இடமாற்றம் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு விரும்பியபடியே மாற்றம் கிடைக்கும். சம்பளம் அதிகரிக்கும். தகவல் தொழில் நுட்பத்துறையில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டில் இருந்து நல்ல வாய்ப்புகள் தேடிவரும். உங்கள் உழைப்புக்கேற்ற அதிக பலன்கள் கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்தச் சனிப்பெயர்ச்சி இதுவரை குழம்பியிருந்த மனதைத் தெளிவுபடுத்துவதுடன் சமூகத்தில் செல்வாக்கை அதிகரித்து வெற்றி நடைபோடச்செய்யும்.**

## பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம்

முல்லைத்தீவு, டிசெ. 26

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் மாணவர்களுக்கு சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்குதல், பன்முக ஆளுமையை விருத்தி செய்தல் போன்ற நோக்கங்களுடன் திட்டத்தை முன்னெடுத்தனர். (ரி-27)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உறவினர்களால் திடீர் செலவுகள் ஏற்படும். காரியங்கள் அனுகூலமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**இடபம்:** குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பொறுமை மிக அவசியம். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வருத்தங்கள் நீங்கி மகிழ்ச்சி பிறக்கும். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கன்னி:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். வியாபாரம் வழக்கம் போல் நடைபெறும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகள் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உற்சாகமான சூழ்நிலை ஏற்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச்செல்லவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். இன்று நீங்கள் ஆஞ்சநேயரை வழிபடுவது நன்று.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையாக இருக்கவும்.

**கும்பம்:** எதிலும் ஒரு பிடிப்பில்லாத மனநிலை ஏற்படக்கூடும். வழிபாட்டின் மூலம் தெளிவு பெற முயற்சிக்கவும். உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கக்கூடும். விட்டுக்கொடுத்துச் செல்லவும். காரியம் இழுபறியாகும்.

**மீனம்:** எந்த விஷயத்திலும் பொறுமையுடன் சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வீண்விவாதம் வேண்டாம். மனஅமைதி கிடைக்கும். நண்பர்களுக்காக செலவு செய்ய நேரிடும். பிணக்குகள் நீங்கும்.

## வாகன வருமானவரிப் பத்திரம் புதிய நடைமுறைகள் அறிமுகம்

வாகன வருமானவரிப் பத்திரத்துக்காக புதிய நடைமுறைகள் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளன. அடுத்தவருடம்முதல் இளம்மஞ்சள் நிறத்திலான வருமானவரிப் பத்திரங்கள் நடைமுறைக்கு வருகின்றன.

மாகாண போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் இது தொடர்பில் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் உள்ள ஏனைய விடயங்கள் வருமாறு;

இவ்வருடத்துக்குரிய மோட்டார்போக்குவரத்துத் திணைக்களத்தின் வருமானவரிப் பத்திர விநியோக நடைமுறையானது 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது. 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியுடன் மீண்டும் பணிகள் ஆரம்பமாகும்.

மேலும் எந்தவொரு வாகனத்துக்கும் வாகன வருமானவரி முடிவடைந்த மறுதினத்திலிருந்தே தண்டப்பணம் அறவிடப்படும். புதிய நடைமுறையின் அடிப்படையில் வரிப்பத்திரம் முடிவடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே வரிப்பத்திரங்களைப் புதுப்பித்துக்கொள்ள முடியும். அத்துடன், ஏனைய மாகாணங்களுக்கான வரிப்பத்திரங்கள் வழங்கும் செயன்முறை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை -என்றுள்ளது. (ம)

## திருவாசக முற்றோதல்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயத்தில் திருவெம்பா உற்சவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. நாளை புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு கும்பப் பூசையுடன் கிரியைகள் ஆரம்பமாகி சுவாமி உள்வீதி வலம் வந்து காலை 6 மணிக்கு ஆலயத்திலுள்ள பித்தர் கேணியில் தீர்தோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 6மணி தொடக்கம் திருவாசக முற்றோதலும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இயற்கையின் படிப்பினையை மறுத்தல்

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து இன்றோடு 19 வருடங்கள். 2004ஆம் ஆண்டு இதேநாளில், ஆழிப்பேரலை இலங்கையின் கரையோரப்பகுதிகளை வாரிச் சுருட்டிக் கொண்டு போனது. மனிதர்கள் மட்டுமல்லாது கால்நடைகள், வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள் என்று கரையில் இருந்த சகலவற்றையும் கண்ணிமைக்கும் நேரத்தில் கடல் விழுங்கியிருந்தது. கடல் வந்துபோன தடமெல்லாம் சடலங்கள் குவிந்து கிடந்தன, எங்கும் ஓலம். இந்தப் பேரனர்த்தத்தை நேரில் பார்த்தவர்கள் அதிர்ச்சியில் இருந்து மீளவே மாதக் கணக்கானது. இப்போது அவையெல்லாமே ஆறிப்போன பழங்கதைகள். எனினும் ஆழிப்பேரலை கற்றுத் தந்துவிட்டுப் போன படிப்பினையை இன்னமும் சிங்கள அரசு புரிந்துகொள்ள மறுக்கின்றது.

பெரும் உயிரழிவையும், உடைமையிழப்பையும் உண்டு பண்ணிய ஆழிப்பேரலையின் ஊழித்தாண்டவத்தில் இருந்து இலங்கை எப்படி மீளும்? என்ற வினாக்களும் மக்களிடம் எழுந்திருந்தது. ஆனாலும் நாடு அதிவிரைவாகவே மீண்டது. இந்தத் துரித மீட்சிக்கு விடுதலைப்புலிகளின் துல்லியமான திட்டமிடலுடன் கூடிய மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளும் மிகமுக்கியமான காரணமாக அமைந்தன. இதனாலேயே புலிகளைப் பின்பற்றியும், அவர்களோடு இணைந்து அரசாங்கமும் தன் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. போர்க்கால வாழ்வு புலிகளுக்கு சிதைந்து போன வாழிடங்களையும், உளச்சிதைவுக்குள்ளான மக்களையும் எப்படி பழையநிலைக்கு கொண்டுவரலாம் என்று கற்றுக்கொடுத்திருந்தது. அதனாலேயே ஆழிப்பேரலை போன்ற அனர்த்தம் நிகழ்ந்தபோது, தம் பகைமையைத் தூக்கி ஓரமாக வைத்துவிட்டு இன, மத பேதமின்று மக்கள் நலனை மட்டும் முன்னிறுத்தி ஆழிப்பேரலை அனர்த்த வடுக்களைத் துடைத்தெறியும் பணியை புலிகளால் செவ்வனே செய்யமுடிந்தது. மாறாக புலிகள் அந்த இடர்நேரத்திலும் சிங்கள மக்கள் மீது பகைமையோடு செயற்பட்டிருந்தால், சிலவேளைகளில் இப்போதும்கூட ஆழிப்பேரலை மீளமைப்பு நடவடிக்கைகள் இழுபட்டிருக்கும். எனவே எந்தவொரு அனர்த்தத்தின் போதும் பகை மறப்பு, பாரபட்சமின்மை, ஒன்றுபடுதல், அர்ப்பணிப்பு என்பன அதிமுக்கியமானவை என்பதை ஆழிப்பேரலைக்கு பின்னான காலம் இலங்கைக்கு உணர்த்தியிருந்தது.

ஆனால், ஆழிப்பேரலையைவிடவும் மோசமான விளைவுகளை உண்டுபண்ணிய பொருளாதாரப் பேரிடருக்குப் பின்னர் கூட சிங்கள அரசின் மனோநிலை மாறவில்லை. இலங்கை அரசாங்கம் ஆழிப்பேரலைக் காலத்தில் புலிகள் செய்ததைப் போன்று பகைமறந்து, நாட்டை முன்னேற்ற எல்லோருக்கும் அழைப்பு விடுத்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் கூட கையேந்தியிருக்கத் தேவையில்லை. ஏனெனில் புலம்பெயர் நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களில் பலர் பொருளாதாரரீதியாக மிகப்பலம் பொருந்திய நிலையில் உள்ளனர். அவர்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்ய முன்வந்திருந்தாலே, சில மாதங்களுக்குள் இலங்கை முன்னர் இருந்ததைவிடவும் பொருளாதாரத்தில் நிமிர்ந்திருக்கலாம். ஆனால், 'நாடு அழிந்தாலும் பரவாயில்லை, பௌத்தமும் சிங்களமுமே இலங்கையை ஆளவேண்டும், சிறுபான்மையினரை ஒடுக்கியே வைக்கவேண்டும்'என்ற நோக்கிலேயே சிங்களப் பேரினவாத அரசு செயற்படுகின்றது. மஹிந்தவாக இருந்தாலென்ன, கோத்தாபயவாக இருந்தாலென்ன, ரணிலாக இருந்தாலென்ன, எல்லோருமே ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகளாக வரலாற்றில் இருந்து பாடம் கற்கத் தவறியே வருகின்றனர். அவர்களுக்குத் தங்கள் பதவிக்கதிரை முக்கியமானது. பதவியைக் காப்பாற்றும் மந்திரமாக இனவாதமும், சிறுபான்மையினர் மீதான எதிர்ப்புமே இருக்கின்றன என ஆட்சியாளர்கள் தவறாகக் கருதுகின்றனர். அந்தக் கருது கோளே இலங்கை பல தசாப்தங்களாக இருளில் வைத்திருக்கிறது. அது தவறு என உணர்த்த ஆழிப்பேரலை போன்ற பல படிப்பினைகளை இயற்கை புகட்ட முயன்றாலும், அது சிங்கள ஆட்சியாளர்களுக்கு இன்னும் புரியாமொழியாகவே இருப்பதுதான் வேதனை.



# வருமான இழப்பை சந்தித்துள்ள 60 வீத இலங்கைக் குடும்பங்கள்!

**கொழும்பு, டிசெ.26**

**2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் இலங்கையில் 60 வீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் மொத்த வருமானத்தில் இழப்புகளைச் சந்தித்துள்ளன.**

வேலை நேரம் குறைதல், வாடிக்கையாளர் குறைவு, விற்பனை குறைதல், வேலை இழப்பு, வேலைகளில் இருந்து தற்காலிக நிறுத்தம், கால்நடைத் தீவனம், எரிபொருள், உரம் ஆகியவற்றின் விலையேற்றம் என்பனவே அதற்குக் காரணம் என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

91 வீதமான குடும்பங்கள் தங்கள் மொத்த குடும்ப சராசரி மாதந்தச் செலவில் அதிகரிப்பைச் சந்தித்துள்ளன. பொருளாதார நெருக்கடியால் 22 வீதமான குடும்பங்கள் கடனாளிகளாக மாறியுள்ளன. 7 வீதமானோர் தங்கள் சுகாதார சிகிச்சை முறைகளை மாற்றிக் கொண்டுள்ளனர். 3 முதல் 21 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 54.9 வீதமானோரின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ஜனவரியில் அஸ்வெசும விண்ணப்பம்

அஸ்வெசும திட்டத்துக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

உரியமுறையில் விண்ணப்பங்களை அனுப்ப முடியாத தரப்பினர் தொடர்பில் கவனம் செலுத்தி, ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய மீண்டும் விண்ணப்பங்களை கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## வகுப்புகளுக்கு தடை

கொழும்பு, டிசெ.26

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அனைத்து கருத்தரங்குகள், பயிலரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் என்பவற்றை எதிர்வரும் 29ஆம் திகதி நள்ளிரவுடன் அல்லது அதற்கு முன்னதாக முடிவுறுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 4ஆம் முதல் 31ஆம் திகதிவரை 2 ஆயிரத்து 298 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சுற்றுலாவிகளின் வருகை அதிகரிப்பு

*கொழும்பு, டிசெ.26*

*கடந்த மூன்று வாரங்களில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 47 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.*

*இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.4 மில்லியன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.* (எ-இ)

## சுனாமி வதந்தி

இன்று சுனாமி ஏற்படக்கூடும் என்று சமூக ஊடகங்களில் வெளியாகும்தகவல்வதந்தியே என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்தார்.

இவ்வாறான தகவல்களால் மக்கள் குழப்பமடையத்தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## நாளை

**27.12.2023**

**புதன்கிழமை**
**மார்கழி 11**

சுபநேரம் : 04.57 - 06.27
ராகுகாலம் : 12.27 -01.57

ஆருத்திரா தரிசனம்

## நாளொரு நல்வார்த்தை

**மனித முயற்சிக்கு எவ்வித எல்லைகளும் இருக்கக்கூடாது.**

**- ஸ்டீபன் ஹாக்கிங்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரான எம்.ஜி.ஆரின் 36ஆவது நினைவுதினம் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-23)

# சுனாமி நினைவேந்தல் நிகழ்வும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், டிசெ.26

சுனாமிப் பேரலையின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காபுர சிற்பாலயம் கலைக்கூடத்தில் வரலாற்றுப் பதிவான சுனாமிச் சிற்பத்தின் முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.25 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தனின் கைவண்ணத்தில் உருவான சிற்பங்களின் கண்காட்சி இன்று பி.ப 2 மணி வரை குறித்த சிற்பக் கலைக் கூடத்தில் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ரி-66)

# முல்லை. நகரத்துக்குள் பேருந்து வரவேண்டும்

## விவசாயிகள், மக்கள் வலியுறுத்து

**வன்னேரிக்குளம், டிசெ. 26**

**முல்லைத்தீவு நகர்ப் பகுதிக்குள் பழைய பேருந்து நிலையத்துக்கு பேருந்துகள் வரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

2010ஆம் ஆண்டின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு அருகில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. இது பல மக்களுக்குப் போக்குவரத்துச் சிரமமாக இருக்கும் என்று சுட்டிக்காட் டப்பட்டதுடன், புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்துக்கும் சென்று 5 நிமிடங்களாவது தரித்துநின்று பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கோரிக்கைகள் முல்லைத்தீவு மாவட்ட நகர அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனினும், அவை இற்றைவரை செயற்படுத்தப்படவில்லை. எனவே பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன்கருதி முல்லைத்தீவு பழைய பேருந்து நிலையத்துக்கும் பேருந்துகளை அனுப்பிவைக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-13)

# குருபூசையும் வெள்ளி விழாவும்

யாழ்ப்பாணம், டிசெ. 26

நல்லூர் ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்றம் நடத்தும் அகத்தியர் பெருமான் குருபூசையும் , கலாமன்ற வெள்ளி விழாவும் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 2.30மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்றப் பணிப்பாளர் கலாவித்தகர் திருமதி மா. அனந்தலெட்சுமி தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் அருளுரையை நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், ஆசியுரையை இணுவில் தர்மசாஸ்த்தா குருகுல காயத்திரிபீட ஆசிரியர் சிவஸ்ரீ.மகாதேவ.சோமசுந்தரக்குருக்களும் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்ற மாணவர்களின் இசைநிகழ்வும், நுண்கலைமாணி திருமதி கவிதா வாமதேவசர்மா நெறியாள்கையில் வீணை இசையும், உரும்பிராய் ஜெயானந்தா ஜீவநர்த்தனாலய இயக்குநர் முதுகலைமாணி செல்வி ஆ. ஜீவிதா குழுவினர் வழங்கும் நடனநிகழ்வும் , சைவப்புலவர் கந்த. சத்தியதாசனின் " பொதிகமலையில் ஞானம் பெற்ற அகத்தியர்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், கலாவித்தகர் திருமதி மா. அனந்தலெட்சுமி வீணை, முதுகலைமாணிகள் திருமதி சுபேந்தினி லிங்கேஸ்வரன், திருமதி மதிவதனி விஜிந்தன் வயலின் குழுவினர் வழங்கும் வாத்தியபிருந்தா இசை நிகழ்வும், பரிசில்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (ரி-113)

# திருவாசக முற்றோதல்

யாழ்., டிசெ.26

நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அடியார்களை கலந்துகொள்ளுமாறு ஆலயத் தலைவரும், பரிபாலன சபையினரும் அழைப்பு விடுத்தனர். (ரி-100)

# திருவாசகவிழா

யாழ்., டிசெ.26

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசக விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரை, அறிமுகவுரை, சிறப்புச் சொற்பொழிவு, இசை நாவரசு எம்.எஸ்.பிரதீபன் குழுவினரின் திருவாசக இசை, சிறுப்பிட்டி நாகதம்பிரான் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (ச-66)

# நிவாரணப் பொதி கையளிப்பு

யாழ்., டிசெ.26

யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி ஊழியர் நலன்புரி சங்கம், அங்கத்தவர்களுக்கு 3ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுகளை வழங்கியுள்ளது. (ரி-63)

# குளங்களைப் பராமரிக்க ஆளணிப் பற்றாக்குறை

## முல்லை. மாவட்ட விவசாயக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 20 பெரிய மற்றும் நடுத்தரக் குளங்கள் காணப்படுகின்றன. இவற்றின் கண்காணிப்பு மற்றும் ஏனைய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத்தின்கீழ் 8 குளங்களும், வவுனிக்குளம் நீர்ப்பாசனத்தின் கீழ் 12 குளங்களுமாக மொத்தம் 20 பெரிய மற்றும் நடுத்தர குளங்கள் மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பராமரிப்பு மற்றும் அலுவலக வேலைகளுக்கான ஆளணிப் பற்றாக்குறைநிலவுவதாக மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வவுனிக்குளத்தில் 14பேர், முத்துஐயன்கட்டில் 14 பேருமாக 28 பேர் தேவையாகவுள்ள நிலையில் வவுனிக்குளத்தில் 8 பேரும் முத்துஐயன்கட்டில் 8 பேருமே உள்ளனர்.

பராமரிப்பு உத்தியோகத்தர்கள் வவுனிக்குளத்துக்கு 30 பேரும், முத்துஐயன்கட்டுகுளத்துக்கு 32 பேரும் தேவையாக உள்ள நிலையில், வவுனிக்குளத்தில் 11 பேரும், முத்துஐயன்கட்டில் 13 பேருமாக 24 பேரே உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி-19)

# மூக்குக் கண்ணாடி கையளிப்பு

யாழ்., டிசெ.26

வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் நிதி அனுசரணையில் கரவெட்டிஒன்றிணைந்த இளைஞர் அமைப்பினால் 'ஒளி கொடுப்போம்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு கரவெட்டி கிழவி தோட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் கரவெட்டி ஒன்றிணைந்து இளைஞர்கள் அமைப்பின் தலைவர் தலைமையில் நேற்று திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தன் கலந்துகொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். (ரி-27)

# வழிகாட்டல் கருத்தரங்கு

*யாழ்ப்பாணம், டிசெ.26*

*வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன்.பி.ருவேந்திரா தலைமையில் நெல்லியடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் நாளை புதன்கிழமை காலை 9மணி முதல் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது.*

*கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ.நித்திலவர்ண்ன், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் கிருஷ்ணபிள்ளை கந்தவேள் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்கவுள்ளனர். (ரி-100)*

# சிறைச்சாலையில் மாநாட்டு மண்டபம்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட மாநாட்டு மண்டபத் திறப்பு விழா தியாகி அறக்கொடை நிலையத்தின் நிதி பங்களிப்புடன் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் கே.வி.ஏ. உதயகுமார தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறைச்சாலை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் காமினி வீ. திஸாநாயக்க பிரதமர் விருந்தினராகவும், தியாகி அறக்கொடை நிலையத்தின் சார்பாக வாமதேவா தியாகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

## திரு.பாலன் கணேசமூர்த்தி - அதிபர்

### கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்

(26.12.2023)



Congratulations

மணிவிழாக் காணும் எம் மகத்தான முதல்வரே!
வையகம் போற்ற வாழும் இக் காலமதில்
கிளிநொச்சி மண்ணில் மகத்தான சேவையாற்றி - ஈற்றினில்
கிளி / இந்து ஆரம்ப பள்ளிதனில் மகுடம் சூடிய
- மன்னவனாய்
நல்லாசானாய் செயலூக்கம்மிக்க முதல்வராய்
தன் இயலாமையிலும் இயலாது என்றிருக்காது
தன்னாலும் இயலும் என்று இயங்கிய செயல்வீரன் -நீங்கள்
மாணவர்களின் மனங்களில் மணங்கவர்ந்த நல்லாசானாய்
பெற்றோர் உள்ளங்களைக் கவர்ந்த நாயகனாய்
கல்வியுலகினருக்கு முன்னுதாரண கல்வியாளனாய்
உங்கள் குடும்ப உறவுகளின் உத்தம தலைவனாய்
பற்பல பாங்கினைப் பெற்று வழிகாட்டினீர்கள்
எம் பள்ளிதனில் பௌதீக வளம் பெருக்கி
கற்றலை கவிநிலையாக மாற்றிய சான்றோன் - நீங்கள்.

வெற்றிகள் பல பெற்று சாதனைகள் பல படைத்த
பாடசாலையின் பொற்காலம் - அது
வெற்றிகள் பல பெற்று விருதுகள் பெற்றிட
வழி வகுத்த காலம் - உங்கள் காலம்
பொறுமையுடன் நிதானமும் தீர்க்க தரிசனமும்
கொண்டு முடிவுகள் எடுக்கும் முகாமையாளர்
நீங்கள் வளர்த்த விருட்சங்கள் பல விந்தைகள்
புரிகின்றன பற்பல துறைகளில்
உங்கள் சேவைகளை முப்பத்து மூன்று ஆண்டுகள்
ஆற்றி அகவை அறுபதில் ஓய்வு பெறும் - நீங்கள்
கல்விப் பணியிலும் இறைபணியிலும். சமூகப் பணியிலும்
பொழுதினைப் போக்கி அன்புடைய மனையாளுடன்
அகம் மலரும் பிள்ளைகளுடன் மற்றும் அன்பு உறவுகளுடனும்
இனி வரும் காலத்தில் இன்பமுடன்
இறைவன் துணை கொண்டு வாழ வாழ்த்துகின்றோம்
வாழ்க! வாழ்க! வாழ்க!

Congratulations

**சேவைக்காலம்- 16.03.1990 - 26.12.2023**

**சேவைப் பாடசாலைகள்.**

1. கிளி / புனித பற்றிமா றோ.க. த.வித்தியாலயம் - 1990 - 1993
2. கிளி / ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை - 1993 - 1997
3. கிளி புனித அந்தோனியார் றோ.க.த.வித்தியாலயம் - 1997
4. கிளி / ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை - 1998 - 1999
5. கிளி / செட்டியார்குறிச்சி அ.த.க.பாடசாலை. - 1999
6. கிளி / ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை. - 2000 - 2004
7. கிளி / கண்ணகைபுரம் அ.த.க பாடசாலை. - 2004 - 2013
8. கிளி / கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம். - 2013 - 2023

Congratulations

பாடசாலைச் சமூகம்.
கிளி/கிளிநொச்சி
இந்து ஆரம்ப வித்தியாலயம்.

விளம்பர அனுசரணை

**தமிழ்க்குமரன் புடைவையகம்**
முத்துமாரி அம்மன் வீதி,
உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

**பிரிதா உணவகம்.**
சேவியர் கடைச் சந்தி,
ஆனந்தநகர், கிளிநொச்சி.

**பாலசிங்கம் பவான்**
இல. 332, 1 ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

திருமதி **ஜெயக்குமார் அனுஷா**
இல-376, ஜெயந்திநகர்.
கிளிநொச்சி.

---

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17
02
1925



மறைவு
17
12
2013

## அமரர் அருணாசலம் நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியர், புல்லாங்குழல் வித்துவான், கலாபூஷணம், வேணுகானமணி)

திதி: பூரணை (26.12.2023)

அன்பாலும். பண்பாலும். இனிய புன்னகையாலும்
அனைவர் இதயத்திலும் நிறைந்த எம் அன்புத் தெய்வமே!
அன்பின் விருட்சமாகி. பாசநிழல் பரப்பி
பண்பின் வழிகாட்டி. அரவணைப்பில்
நேசக்கரம் நீட்டி ஆதரித்த பெருநெஞ்சே!
வானுறையும் தெய்வத்தின் பாதாரவிந்தங்களில்
சாந்தியுடன் சங்கமித்திருக்கும் உங்களின்
அன்புருவம் என்றென்றும் நிலைத்திருக்கும்
எம் மனத்திரையில்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!

உங்கள் பாதங்களிற் பணிந்து பாசமுடன்
நினைவுகூரும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இல 435/3, கோயில் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

(cs.53241) (N.1)

---

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை

## இந்தியன் செலக்ஷனின்

## நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள், சல்வார்
துணிகள், டொப், பாட்டி
புரொக், சேட்,
ரீ சேட், சோட்ஸ் மற்றும்
சிறுவர்களுக்கான
ஆடைகள்



## விஷேட விலைக்கழிவு

ரெடிமேட் சல்வார்
750 /=

டொப்
500/=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

காலம்: 16.12.2023 முதல் 31 ஆம் திகதி வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 05 . 1940

மறைவு 06 . 01 . 2023



## அமரர் சுப்பிரமணியம் அருளம்மா

திதி: மார்கழி பூரணை (26.12.2023)

ஆண்டொன்று ஆனாலும் - அம்மா!
அகலவில்லை உன் பிரிவுத்துயர் - தாயே!
திருத்தொண்டு பலபுரிந்த திருமகளே - அம்மா!
திருவெண்பாவை தினத்தினிலே - தாயே!
சிவலோகம் திறந்திருந்தவேளை - அம்மா
அவன் பாதம் தனையடைந்த - தாயே!
ஆனந்த பெருவாழ்வு பெற்று வாழ்க என்றும்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

மூத்தவிநாயகர் வீதி,
30/18, 2 ஆம் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
குடும்பத்தினர்
(ஜெகன் போட்டா)
077 766 6746

(cs.27469) (N-1)

# ஆபத்தான மரம் யாழில் அகற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்.பிரதான வீதியின் சுண்டுக்குளிச் சந்திக்கு அருகாமையில் பாறிவிழும் நிலையில் ஆபத்தாகக் காணப்பட்ட மரம் அடியோடு அகற்றப்பட்டுள்ளது.

நூற்றாண்டுகால பழைமைவாய்ந்த மலைவேம்பொன்றே மரக்கூட்டுத்தாபனத்தால் அடியோடு வெட்டி அகற்றப்பட்டது. (ச-17)

## மணமகன், மணமகள் தேவை

யாழ் இந்து (V) கனடாவில் பிரஜா உரிமை பெற்ற 29 வயதுடைய மணமகனுக்கும், 40 வயதுடைய திருமணமாகாத கணக்காளரான மணமகளுக்கும் நன்கு படித்த கௌரவமான குடும்பத்தில் இருந்து மணமகளும், மணமகனும் எதிர்பாரர்க்கின்றோம்.

Rajan- 074 087 7109

## மணமகள் தேவை

1983, யாழ். இந்து கௌரவ 12 இல் செவ்வாய் 37 கிரகபாவம் கொண்ட கார்த்திகை - 4, நட்சத்திரம் உடைய சைவ போசன அரச உத்தியோகம் கொண்ட மணமகனுக்கு பொருத்தமான வரன் தேவை.

075 023 8944

## ஆண்டுகள் 19 இலும் அழியாச் செல்வங்களாய்!

பேரலையில் பெருங்காவியமான பெருமகன்கள்




ஆண்டுகள் 19 ஆகினும் அழியா நினைவுகளாய் எம் மனதில்......

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1942

மறைவு 24 . 12 . 2023



## சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை (குணம்)

(உரிமையாளர் பரம்ஸ் மோட்டோர்ஸ், பரம்ஸ் ரான்ஸ்போட் - சாவகச்சேரி)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை நேற்று முன்தினம் (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், நாகரத்தினம், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் விக்கினேஸ்வரி, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், இரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும், கிருபராஜ் (பிரான்ஸ்), ஜீவராஜ் (பரம்ஸ் ரான்ஸ்போட்), சுஜிதா, சுதர்சன் (பரம்ஸ் மோட்டோர்ஸ்), சுதாகர் (லண்டன்), சுதாஷினி (ஆசிரியை - யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌரி (பிரான்ஸ்), லோஜினி, ஜெயகாந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பருத்தித்துறை நகரசபை), சுபாசினி, வினுஜா (லண்டன்), கிஷோக்குமார் (கிஷோர் ரயர் ஹவுஸ் - சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபினாஷ், அனுஷ்கா (பிரான்ஸ்), லக்மிகன், லக்ஷ்மிகா, சஞ்யுதன், ஆருஷி, ஆஷிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், அக்சயன், பிரஜித், மதுமிரா, யுவன், யதார்த், குருஜித் ஆகியோரின் ஆருயிர் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வராஜா, பூமணி மற்றும் கணேசன், வளர்மதி, சந்திரலேகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2023) புதன்கிழமை கண்டுவில் 1 ஆம் ஒழுங்கை, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 809 8798
077 774 3350

(cr., 53262) N-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 08 . 1940

இறப்பு 24 . 12 . 2023



## முத்தையா கவிமுத்துமணி

மாரீசன் கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும், அன்னசத்திரலேன், கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கவிமுத்துமணி நேற்றுமுன்தினம் ( 24.12.2023) காலை இறைவனடி சேந்தார்.

அன்னார் சாரதாமணியின் அன்புக் கணவரும், பிரபாலினி - தவவேல், காலஞ்சென்ற பிரபாலசிங்கம் மற்றும் கிருபாலினி - கிரிதரன், நித்தியா - முரளீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிலாசன், கஜமுகன், மிதுனா, ஆர்த்திக், ஹேராம், ஆதவன், அபினயா, அர்ச்சனா, ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

10, அன்னசத்திரலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
076 718 3776

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்.

(cs53281) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மத்திய கல்வியமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப்பிரிவு கல்விப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீமாதஸாநாயக்க மற்றும் கலாநிதி லலிதாபட்டுவித்த ஆகியோர் வவுனியா வடக்கு வலய புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அண்மையில் களத்தரிசிப்பை மேற்கொண்டனர். பாடசாலைமட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி விடயங்களைப் பார்வையிட்டனர். இவர்களுடன் வடக்கு வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் லதாங்கி, ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ரவிச்செல்வன் ஆகியோரும் இணைந்திருந்தனர். (ச-75)



குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலய புதிய சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ரி-66)





சாவகச்சேரி, சங்கத்தானை முருகன் முன்பள்ளி சிறார்களின் கலைவிழாவும், அடுத்த வருடம் பாடசாலைகளில் இணையவுள்ள சிறார்களுக்கு மதிப்பளிப்பு நிகழ்வும் முன்பள்ளி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ரி-9)



திருநாவலூர் நாவலர் சனசமூக நிலையத்தின் இலவச பாலர் கல்வி நிலைய கலைவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் யாழ். மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியால மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. (ரி-100)



பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசித் திருவிழா உற்சவ சுவர்க்கவாசல் தரிசனம் கடந்த சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெற்றது. (ரி-66)



வட்டுக்கோட்டை பிளவத்தை அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடாசாலையின் அதிபர் முருகதாசன் தலைமையில் இடம்பெற்றது. சிறப்புமலரை பாடசாலை அதிபர் வெளியிட்டு வைத்தார். முதலாவது பிரதியை வடமகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் பெற்றார். மாணவர்களினுடைய கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல்கள் என்பன இடம்பெற்றன. (ச-125)



வடமராட்சி, பருத்தித்துறையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் இயேசுபாலன் பிறப்பை முன்னிட்டு நத்தார் தின நள்ளிரவு கூட்டுத்திருப்பலி ஆராதனைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. (ரி-100)



உரும்பிராய் காளி அம்பாள் ஆலய வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்றது. (ரி-66)



கடந்த மாதம் நடைபெற்று முடிந்த தேசிய மட்ட அழகியல் போட்டிகளில் வெற்றி பெற்ற அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை திறந்த வெளி அரங்கில் பாடசாலை அதிபர் வை.பிரதீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணிக்கு நடைபெற்றது. (ரி-66)



வைகுண்ட ஏகாதசி உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விஷ்ணு ஆலயங்களில் வைகுண்ட ஏகாதசி விரத பூஜை வழிபாடுகள் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றன. (ரி-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முகாமைத்துவம்: ஆசிரியரால் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், டிசெ. 26**

**யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆங்கில இலக்கிய ஆசிரியர் வெற்றிவேல் சக்திவேல் யாழ்ப்பாணக் கல்லூரியின் நிதி முகாமைத்துவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிலும் தொழில் திணைக்களத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.**

ஓய்வூதியத் தொகை, சம்பள நிலுவை, ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான கொடுப்பனவு, மொழி தொடர்பான கொடுப்பனவு ஆகியன வழங்கப்படாமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் திணைக்களம் ஆகியவற்றில் அவர் முறையிட்டார். விசாரணைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் குற்றப்பணத்தை தொழில் திணைக்களத்தில் கட்டியதோடு பணிக்கொடையையும் செலுத்தினார். ஓய்வூதியம் தொடர்பான வட்டியுடனான குற்றப் பணத்தை அதிபர் ஒக்ரோபர் மாத இறுதிப் பகுதியில் கல்வித்திணைக்களத்தில் செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் பாடசாலையின் தற்போதைய அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, 2013ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவிலிருந்து கல்லூரிக்கு வழங்கப்படும் நிதி இடைநிறுத்தப்பட்டமை அவரது ஓய்வூதியப் பணம் செலுத்தப்படாமைக்கான காரணமாக அமைந்தது. இதேவேளை அவரது நிலுவைக் கொடுப்பனவு தயாரான போதிலும் அதனை அவர் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை.

இதேவேளை மேற்படி ஆசிரியர் ஓய்வுபெற்ற பின்னரும், எம்மிடம் தொடர்ந்து பணியாற்றக் கோரியிருந்தார். அவர்மீது பெற்றோர் மற்றும் மாணவர்கள் முன்வைத்த சில குற்றச்சாட்டுகள் காரணமாக, கல்லூரி ஆளுநர் சபை அவரது உள்ளீரப்பை இரத்துச்செய்ததுஎன்று அதிபர் குறிப்பிட்டார். (ஓ-125)

# வெண்தத்தித் தாக்கம் கிளி.யில் விழிப்பூட்டல்

கிளிநொச்சி, டிசெ. 26

பரவிவரும் வெண்முதுகு தத்தித் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் அவற்றின் பாதிப்புகளைக் கண்டறிதல் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வளவாளராக பூச்சியியல் துறை ஆராய்ச்சி வட பிராந்திய உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். ராஜேஷ்கண்ணா பங்கேற்று வெண்முது தாவர தத்தியால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பாதிப்புகள் மற்றும் அதற்கான தீர்வுகள் என்பன தொடர்பில் விளக்கமளித்தார்.

இதில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், கிருமிநாசினி விற்பனை நிலையத்தினர், விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பங்கேற்றனர். (ச-13)

# வடிகால்கள் யாழில் துப்புரவு

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ். மாநகர பிரதேசத்திலுள்ள வடிகால்களைத் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடிகால்கள் ஊடாக வெள்ளம் வடிந்தோட வசதியாக அவை தூர் வாரப்படுகின்றன.

முதற்கட்டமாக நாவாந்துறையில் வெள்ளம் தேங்கி நிற்கும் பிரதேசங்களில் காணப்படும் வடிகால்களில் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# பூநகரியில் மின்னுற்பத்தி: மக்களுக்கு தெளிவூட்டல்

கிளிநொச்சி, டிசெ. 26

கிளிநொச்சி, பூநகரியில் அமைக்கப்படவுள்ள சூரியகல மின்னுற்பத்தி திட்டம் மற்றும் கிளிநொச்சி பூநகரி குளப் புனரமைப்பு ஆகியவை தொடர்பாக பிரதேச மக்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் பூநகரி பிரதேச செயலாளர் ரி. அகிலன் தலைமையில் பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் பணிப்பாளர் ஜெயரஞ்சன், திட்டத்தின் சமூக பொருளாதாரப் பாதிப்புகள் தொடர்பாக ஆராயும் நிபுணர் யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜீவசுதன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பங்கேற்று திட்டம் பற்றிய விளக்கங்களை வழங்கினர். (ச-13)



கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடப்பாண்டுக்கான ஒளிவிழா கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சிறப்புற நடைபெற்றது. (ச-75)



# யாழ்.மக்களின் அன்பு அளப்பரியது

*ரம்பா இந்திரகுமார் தெரிவிப்பு!*

**யாழ்ப்பாணம், டிசெ. 26**

**யாழ்ப்பாண மக்களின் அன்பு அளப்பரியது என தென்னிந்திய முன்னாள் நடிகை திருமதி ரம்பா இந்திரகுமார் தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்ப்பாணத்துக்கு வருவது மிகவும் சந்தோசமாக இருக்கின்றது. யாழ்ப்பாணம் அழகான மாவட்டம். அடிக்கடி நாங்கள் வருவோம். தற்போது வந்ததன் நோக்கம் பிள்ளைகளின் பொழுது போக்குக்காக- என்றார். (ரி-20)**

# பொலித்தீன் பாவனை யாழில் திடீர்சோதனை

யாழ்ப்பாணம், டிசெ. 26

பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் முகமாக சுன்னாகம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினரால் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையின்போது சில வர்த்தக நிலையங்களில் 'வன்டே கப்', லஞ்ச் சீற் உட்படப் பயன்பாடற்ற பொலித்தீன் பொருள்கள் மீட்கப்பட்டன. மேலும் பாவனைக்குப் பயன்படுத்தமுடியாத பொலித்தீன்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் சில வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டன. (ச-17)


## வீடு வாடகைக்கு

மருதடி லேன் நல்லூரில் உள்ள நவீன வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான இரு மாடிகளையும் அனைத்து தளபாட வசதிகளையும் கொண்ட வீடு.

நீண்ட காலத்திற்கு வாடகைக்கு உண்டு.

நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்த இடம்.

வ.சுகுமார் தொடர்பு : 076 881 2077 021 221 6099

## 19ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்......



வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்
மருதமனணில் முத்தாக 08.06.1966

வேலாயுதம்பிள்ளை இளவரசி
மருதமணணில் முத்தாக 29.03.1995

அழிப் பேரலையில் நெய்தலில் வித்தாக 26.12.2004

பொங்கிடும் அலைகடல் எழுந்தது
மழை பொழிந்திட அழிவுகள் நிகழ்ந்தது
உறவுகள் உணர்வுகள் பிரிந்தது
கல்லறை மலர்மாலை சுமந்தது.

மருதங்கேணி வடக்கு, மருதங்கேணி.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22.06.1989



உதிர்வு 28.12.2012

லிங்கநாயகம் மங்கையற்கரசி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**சாரங்கன் (சாரு)**

திதி: 26.12.2023 (பூரணை)

அன்பின் திருவுருவே - சாரு
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டுகள் பதினொன்றல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது

03 ம் வட்டாரம், நெல்லவரை, நெடுந்தீவு.
(39, கலீபா, அப்துல் கபீட் வீதி, யாழ்ப்பாணம்).

குடும்பத்தினர். (CS 53283) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர் பேரவைக்கு முட்டை வீச்சு

வவுனியா, டிசெ. 26
இமயமலைப் பிரகடனத்தின் ஏற்பாட்டாளர்களான உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களின் பதாகைகள் மீது வவுனியா காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் முட்டை வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 2 ஆயிரத்து 500 நாள்கள் முடிவடைந்தன. இதையொட்டி அவர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே உலகத்தமிழர் பேரவையின் உறுப்பினர்களது பதாகைகளுக்கு முட்டைவீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (அ-ஒ-110)

# மண்ணுக்குள் சாராயப்போத்தல்கள்

யாழ்ப்பாண மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் யாழ்பாண பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினரும் இணைந்து நேற்றையதினம் வெவ்வேறு இடங்களில் நடத்திய சுற்றிவளைப் பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்களிடம் இருந்து 250 மில்லிலீற்றர் அளவான 117 சாராயப் போத்தல்களும், 9 முழு சாராயப் போத்தல்களும் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன. மதுபான விற்பனை நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்த நிலையில் இவர்கள் விற்பனை செய்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-23-26-27-125)

# போதைமாத்திரை; இளைஞன் கைது

முல்லைத்தீவு, டிசெ. 26
வள்ளிபுனம், இடைக்கட்டில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது 22 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் 23 வயதான இளைஞன் சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளான். (ஒ-19)

# துஷ்பிரயோக வழக்குகளுக்கு நீதிமன்றங்களில் தனிநாள்


கொழும்பு, டிசெ. 26
நீதிமன்றங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு வாரத்தில் ஒரு நாள் ஒதுக்கப்படவேண்டுமென சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர்கீதா குமாரசிங்க கோரியுள்ளார்.
இது தொடர்பாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுடனும் கலந்துரையாடியதாகவும் அவரும் தனது யோசனைக்கு ஆதரவு தெரிவித்ததாகவும் உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-6)

# வீட்டு அலுமாரியினுள் கசிப்புப் போத்தல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 26
சுன்னாகம், மயிலங்காட்டிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 30 கசிப்புப் போத்தல்கள் அலுமாரியினுள் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 31 வயதான பெண்ணைக் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-125)

# பல்கலை மாணவியின் இறுதிக்கிரியை நேற்று

*யாழ்ப்பாணம், டிசெ. 26*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இறுதிவருட கலைப்பீட மாணவியான குணரத்தினம் சுபீனா (வயது-25) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்திருந்த நிலையில் அவரது இறுதிக்கிரியைகள் ஆயிரக்கணக்கானோரின் பங்கேற்புடன் மாவிட்டபுரத்தில் நேற்று இடம் பெற்றது. (அ-ஒ-27)*



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 200ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 'மாண்புறு மாணவர் சமுதாயம்' எனும் தொனிப்பொருளிலான மாணவர் திறன் விருத்தி போட்டியில், கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலயத்தில் தரம் 4இல் கல்வி பயிலும் மாணவன் உதயகுமார் அக்ஷயன் மாகாணமட்ட பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். (ம-13)

# யாழ். சிறையிலிருந்து 16 பேர் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26
நத்தாரை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 16 கைதிகள் நேற்றுத் திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் கே.பி.ஏ.உதயகுமார தலைமையிலான சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குறித்த கைதிகளைச் சிறைச்சாலையிலிருந்து நேற்றுக் காலை 9 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக வழியனுப்பி வைத்தனர். (அ-ஒ-66)

## கைது...

நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் சோதனைக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் கடந்த ஒருவார காலமாக பொலிஸார் தேடுதல்களை முன்னெடுத்துள்ளனர். புலனாய்வுப் பிரிவுகளால் போதைப்பொருள் விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் சந்தேகத்தில் கைது செய்யப்படுகின்றனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட முழுவதிலும் சுமார் 190 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 125 பேர் வரையில் உயிர்கொல்லி போதைப்பொருள் பயன்படுத்தியமை மருத்துவப் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## உயிரிழப்பில்...

பொற்பதி, குடத்தனையைச் சேர்ந்த சின்னத்தம்பி குருசாமி (வயது-73) என்பவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்திருந்தார்.
உயிரிழப்புத் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை நெல்லியடி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.
சட்ட மருத்துவ அதிகாரி வாசுதேவா உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்டார். வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் குடல் வெடிப்பு ஏற்பட்டு குருதிக் கசிவு காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
எனவே உயிரிழப்பு கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இறப்பு விசாரணை அதிகாரி இது தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக பாரப்படுத்தியுள்ளார்.
உயிரிழப்புத் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-100)

## பாலத்தில்...

மன்னார் - நானாட்டான், முத்தரிப்புத்துறை வீதியில் நேற்று மாலை நடைபெற்ற விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த இருதயதாசன் அமலன் (வயது-28) என்பவர் உயிரிழந்துள்ளதுடன், தொம்மை ஜெபிற்றன் (வயது-28) என்பவர் காயமடைந்து அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
முத்தரிப்புத்துறையிலிருந்து நானாட்டானை நோக்கி மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் இருவரும் பயணித்துள்ளனர். மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரப் பாலத்தினுள் வீழ்ந்ததாலேயே இந்த விபத்து நடைபெற்றுள்ளது.
விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-213)

## ஆழிப்பேரலை...

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி காலை இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவுக்கு அருகில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் நிலநடுக்கத்தால் ஆழிப்பேரலை ஏற்பட்டது. ஒரு சில நிமிடங்களுக்குள் இந்த ஆழிப்பேரலை 2 இலட்சத்து 30 ஆயிரம் பேரைக் காவு கொண்டது.
இலங்கையில் ஆழிப் பேரலையால் 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர். 21 ஆயிரத்து 411 பேர் காயமடைந்தனர். 5 இலட்சத்து 15 ஆயிரத்து 115 பேர் இடம் பெயர்ந்தனர். 3 ஆயிரத்து 954 சிறுவர்கள் தங்கள் பெற்றோரை இழந்தனர்.
வடக்கு - கிழக்கில் உள்ள ஆறு மாவட்டங்கள் ஆழிப் பேரலையால் பெரும் பாதிப்புகளைச் சந்தித்தன. பெரும் அழிவுகளையும், வடுக்களையும் உருவாக்கிய ஆழிப் பேரலை ஏற்பட்டு இன்றுடன் 19 ஆண்டுகள் கடந்துள்ளன. ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் இன்று பல இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.
வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் உள்ள ஆழிப் பேரலை நினைவாலயத்தில் பிரதான நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளது. மேலும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதான நினைவாலயத்திலும் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படவுள்ளது. (அ-ஒ-5)

## மார்கழி...

சபை அறிவித்துள்ளமைக்கு வணிகர் கழகம் அதிருப்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு ஆளுநருக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.
'யாழ். மாநகரசபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவே கட்டணத்தை அறவிடுவதற்கான அறிவுறுத்தலை வழங்கியுள்ளதாக' சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-ஒ-5-66-125)

## டெங்குக்...

டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருவர் டெங்கால் ஏற்கனவே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேடுகளுடன் பூந்தோட்டம் பொதுச்சந்தை



வவுனியா, டிசெ. 26

**வவுனியா பூந்தோட்டம் பொதுச் சந்தையில் கோழிக்கழிவுகளைக் கொட்டுவதால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.**

வவுனியா நகரசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பூந்தோட்டம் பொதுச் சந்தை கடந்த சில மாதங்களாக இயங்காத நிலையில் உரிய பராமரிப்பின்றி உள்ளது.

இந்த நிலையில் அண்மைய நாள்களாக பொதுச்சந்தை வளாகத்தில் கோழி இறைச்சியின் கழிவுகளை சில நபர்கள் வீசிச்செல்வதால் அந்தப் பகுதி சுகாதாரச் சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது. வீசப்படும் கழிவுகளை மிருகங்கள், பறவைகள் காவிச்செல்வதால் அந்தப்பகுதி துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே குறித்த விடயம் தொடர்பாக வவுனியா நகரசபை கவனம் செலுத்தி கழிவுகளை வீசுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன், சந்தையினை புனரமைத்து மக்கள் பாவனைக் காகக் கையளிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

பூந்தோட்டம் பொதுச்சந்தை நீண்டகாலமாக இயங்காத நிலையில் அதற்கு அண்மையில் பல தனியார் இறைச்சி விற்பனை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-110)

# கிளி. தொழிற்பயிற்சியின் ஓராண்டு நிறைவு நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ. 26

கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிறுவனம் சமூக சேவைகள் திணைக்களத்தால் மாற்றுத்திறனாளி இளைஞர், யுவதி களுக்கான தொழில் தகைமையை வழங்கி வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொழிற்பயிற்சி ஓராண்டு நிறைவு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாணவர்களுடைய கண்காட்சியும் நடைபெற்றது.

நிகழ்வின் இறுதியில் புதிய கல்வி ஆண்டிற்கு மாணவர்களை இணைப்பதற்கான நேர்முகத் தேர்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-75)



# இயேசு பிறந்த தேசத்தில் இன்றும் ஏராளம் அழுகுரல்!

## விடியலின் ஒளியாக நத்தார் அமையட்டும்

## யாழ். மறைமாவட்ட ஆயர் அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 26

**இனவாதம், மதவாதம், போர், இறப்பு, பசி, பட்டினி என நீண்டு கொண்டே செல்லும் காரிருளின் ஆட்சிக்கு பாலகன் இயேசுவின் பிறப்பு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்கும் என்பதை நம்புவோம் என யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது நத்தார் வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஒளி அல்லது பேரொளி என்பது இருளற்ற நிலையாகும். ஒளியற்ற நிலை என்பது பார்வை இழந்த நிலையாகும். பார்வையிழந்த நிலையில் ஒரு மனிதனோ மனித குலமோ பயணம் செய்யமுடியாது. எனவே தான் இறைவன் பாவ இருள் சூழ்ந்த உலகில் வாழும் மனிதருக்கு தன் மகனை ஒளியாக அனுப்பி வைக்கின்றார். பாலகன் இயேசுவே இந்த ஒளி. அவரின் பிறப்பே எமக்கான விடியல். அமைதியான விடியலை நோக்கி நாம் பயணம்செய்ய பாலகன் இயேசு என்னும் மாபெரும் ஒளி எம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் யூபிலி ஆண்டை நோக்கிப் பயணம் செய்யும் திரு அவையை, பிறக்கவிருக்கும் 2024ஆம் ஆண்டை, இறைவேண்டல் ஆண்டாக பின்பற்ற திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனைப் புகழ்ந்து கொண்டு, இறைவேண்டலில் எம்மை இணைத்து நம்பிக்கையின் திருப்பயணிகளாக நாம் நடக்க மாபெரும் ஒளியாகிய பாலகன் இயேசுவின் அமைதியும் ஆசீரும் மனுக்குலத்துக்கு என்றும் கிடைப்பதாக.

ரஷ்யா, உக்ரைன், இஸ்ரேல், பலஸ்தீனம் என போர் நடைபெறும் நாடுகளும் இஸ்ரேல், ஈரான், அமெரிக்கா, சீனா, வடகொரியா, தென்கொரியா என போர் முறுகல் நிலையிலுள்ள நாடுகளும் காரிருள் இன்னும் இந்த உலகை கவ்விக் கொண்டே இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றன.

அன்று இராமாவிலே கேட்ட அழுகுரல்களை விட, பல மடங்கு அதிகமான அழுகுரல் இன்று இயேசு பிறந்த தேசத்தில் எங்கும் கேட்கின்றது. இனவாதம், மதவாதம், போர், இறப்பு, பசி, பட்டினி என நீண்டு கொண்டே செல்லும் காரிருளின் ஆட்சிக்கு பாலகன் இயேசுவின் பிறப்பு நிச்சயமாக முற்றுப்புள்ளி கொடுக்கும் என நாம் நம்புவோம்.

இந்த இறைவேண்டல் ஆண்டில் மனந்தளராது நம்பிக்கையோடு செபிப்போம். எனவே இந்த மகிழ்ச்சியின் நாள்களிலே பாலகன் இயேசுவின் அமைதியும், ஆசீரும் முழு உலகையும் நிரப்ப ஆசித்து நிற்கின் றேன் - என்றுள்ளது. (ம)




தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொன்விழா நிகழ்வு யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ரி)


**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**

* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் பின்புறமாக 3 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இராசபாதை வீதி கரையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 882 8638

**உடனடி வேலைவாய்ப்பு (PVT) Ltd.**

அரச அங்கீகாரம் பெற்ற எமது (PVT) Company யில் 05 வகையான பதவிகள், 18 பேருக்கு முன்னுரிமை. உடன் தொடர்புகொள்ளவும்.

தகைமை: A/L

வயதெல்லை : 21-36 வரை

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 075 910 6973

**2024 A/L பௌதிகவியல்**

M.கருணாநிதி B.Sc (Hons)

(077 618 3064)

ஈர்ப்புப் புலம்: (English & Tamil medium)

Dec 27,28,29 திகதிகளில் 8.00AM ➡ 11.00AM

(அலகு பூர்த்தியாக்கப்படும்)

NEW SCIENCE COLLEGE, JAFFNA.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 33 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு**, நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354 071 173 3911

(CS 53252) A-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.